பக்கங்கள்: 09 விலை : 20/-

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 28 புதன்கிழமை 10.06.2020 கதிர் 85

# தனது பணியைத் தொடங்கியது கிழக்கு தொல்லியல் செயலணி

## அனைத்து இன, மத மக்களையும் ஒத்துழைக்கக் கோரிக்கை

**கொழும்பு, ஜூன் 10**

**கிழக்கில் உள்ள தொல்பொருள் இடங்களை அடையாளப்படுத்தி, பாதுகாப்பதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட செயலணி இன்று தனது பணியைத் தொடங்கியது. பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்னவின் தலைமையில் செயலணியின் அனைத்து உறுப்பினர்களும் இந்தத் தொடகக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.**

2

# தேர்தல் திகதி ஓக. 5 என்பதை அறிவித்தார் மஹிந்த தேசப்பிரிய

நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி நடக்கும் என்கிற உத்தியோகபூர்வ அறிவிப்பு தேர்தல்கள் ஆணையாளரா இன்று அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள் நேற்று நடத்திய கலந்துரையாடலின் பின்னர் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய இதனை அறிவித்தார்.

ஆணைக்குழு உறுப்பினர்கள் மூவரினதும் ஏகமனதான தீரமானமாக இந்தத் திகதி பெறப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் திகதியைத் தீர்மானிப்பதற்காக கடந்த 8ஆம் திகதி திங்கட்கிழமை கூடிய தேர்தல்கள் ஆணைக்குழு அன்றைய தினமே தேர்தலுக்கான திகதியாக ஓகஸ்ட் 5ஆம் திகதியை முடிவு செய்திருந்தது.

எனினும் அதனை உத்தியோகபூர்வமாக 10ஆம் திகதி வெளியிடும் வரை அது பற்றிய தகவல்களை வெளியிடுவதில்லை என்று ஆணைக்குழு உறுப்பினர்கள் மூவரும் இணங்கியிருந்தனர்.

அதற்கேற்ப இன்றைய தினம் அந்த உத்தியோகபூர்வ அறிவிப்பு விடுக்கப்பட்டது.

2

# மத வழிபாட்டுக்கும், மேலதிக வகுப்புக்கும் அனுமதி

கொழும்பு, ஜூன் 10

வழிபாட்டுத் தலங்களில் வழிபாடுகளை மேற்கொள்ளவும், மேலதிக வகுப்புக்களை ஆரம்பிக்கவும் அனுமதி வழுங்கப்பட உள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில் ஜூன் மாதம் 12 ஆம் திகதி முதல் 50 பேருக்கு உட்பட்ட வகையில் மத நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என தெரிவிக்கப்படுகின்றது.

2

# நயினை அம்மன் உற்சவத்தில் 30 பேருக்கு மட்டுமே அனுமதி

யாழ்ப்பாணம், ஜூன் 10

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்தத் திருவிழாவை நயினாதீவில் உள்ள 30 அடியவர்களுடன் மட்டும் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் அன்னதானத்துக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்ட செயலாளர் க.மகேசன் தெரிவித்தார்.

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்தத் திருவிழா தொடர்பான முன்னேற்பாட்டுக் கூட்டம் இன்று நடைபெற்றது. அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்தத் திருவிழா இம்மாதம் 20ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 18 நாள்கள் இடம்பெறவுள்ளது.

2

# வாகன வரிப் பத்திரம் இனிமேல் நேரலையில்

## வவுனியாவில் இந்த வசதி



வடமாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஏற்பாட்டில் நேரலை (ஒன்லைன்) ஊடாக வாகன வரி அனுமதிபத்திரத்திற்கான விண்ணப்பங்களை சமர்பிக்கும் வசதி வவுனியா மாவட்ட செயலகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் வாகனவரி அனுமதிபத்திரங்களை பெறுபவர்கள், மாவட்ட செயலகத்திற்குள் வைக்கப்பட்டுள்ள தானியங்கி இயந்திரத்தில் தமது விண்ணப்பங்களை செலுத்தி 14 நாள்களுக்கு

2

# ராஜிதவுக்கு பிணை

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு மேலதிக நீதிவான் முன்னிலையில் இன்று முன்னிலைப்படுத்தப்பட்டபோதே அவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

சர்ச்சைக்குரிய வெள்ளை வான் ஊடக சந்திப்பை நடத்திய சம்பவம் தொடர்பாக ராஜித சேனாரத்ன கடந்த மாதம் 13ஆம் திகதி குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தில் ஆஜராகியிருந்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழ். நாக விகாரையில் உள்ள புத்தரின் கூண்டுக்கு கல்லெறி

## மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் கைவரிசை



யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ்ப்பாணம் நாக விகாரை பிராதான வாயிலுக்கு அருகில் வீதியோரத்தில் வழிபாட்டுக்கு வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலையின் கண்ணாடி கூடு மீது இன்று காலை கல்லெறியப்பட்டது.

2

# 30 பேர் ஓரிடத்தில் கூட முடியாதென்றால் தேர்தல் பரப்புரைகளை எப்படி நடத்துவது?

## கேள்வி எழுப்புகிறார் வேட்பாளர் சிவமோகன்

**(சண்முகம் தவசீலன்)**

தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் 100 பேர் கலந்துகொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கும்போது கொரோனாவைக் காரணம் காட்டி 30 பேர் கூடும் நினைவஞ்சலிக் கூட்டத்தை எப்படித் தடுக்க முடியும்? இப்படியென்றால் தேர்தல் நீதியாக நடக்குமா?

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் பொதுத் தேர்தல் வேட்பாளருமான சி.சிவமோகன்.

சுதந்திரபுரம் படுகொலைகளின் நினைவு நிகழ்ச்சியில் இன்று கலந்துகொண்டு

2

Semba STORE

மளிகைப் பொருள்கள் உங்கள் வீடு நோக்கி...!

யாழ் நகரில் Semba STORE இன் விநியோக சேவை

ஜூன் 5 முதல்

077 411 4422

Payment method - cash on delivery

## தேர்தல் திகதி ஓக. 5 .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காலைக் கதிர் தனது நேற்றைய மாலைப் பதிப்பிலேயே ஒகஸ்ட் 5ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என்கிற விவரத்தை வாசர்களுக்கு முன்கூட்டியே திடமாகத் தெரிவித்திருந்தது.

## 50 பேருடன் மத .............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜூன் மாதம் 15ஆம் திகதி முதல் 100 மாணவர்களுக்கு உட்பட்ட வகையில் மேலதிகவகுப்புக்களைமுன்னெடுக்கமுடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## நயினை அம்மன் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நயினாதீவு பகுதியிலுள்ள 30 அடியவர்கள் மட்டும் திருவிழாவில் கலந்து கொள்ள அனுமதி வழங்கியுள்ளோம். அதேவேளை, மகோற்சவ காலத்தில் அன்னதானம் வழங்குவதற்கும் சுகாதாரப் பிரிவினரால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வெளிமாவட்டங்களில் இருந்து எவரும் ஆலயத் திருவிழாவில் அனுமதிக்கப்படமாட்டார்கள். அத்தோடு யாழ். மாவட்டத்தில் இருப்பவர்களும் கலந்து கொள்ள முடியாது.

எனவேஇதனைக்கருத்தில்கொண்டு இம்முறை நயினாதீவு ஆலய உற்சவத்துக்கு வெளி இடங்களைச் சேர்ந்தவர்கள் வருவதைதவிர்த்துக்கொள்ளவேண்டும்.

அதேவேளை தேர், சப்பறத் திருவிழாக்கள் எதுவும் இடம்பெறமாட்டாது. ஆலய உற்சவங்கள் அனைத்தும் உள் வீதி உடனேயே நிறைவுபெறவுள்ளது - என்றார்.

## 30 பேர் ஓரிடத்தில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உரையாற்றிய போதே அவர் இந்தக் கேள்வியை எழுப்பினார்.

அவராலும் மற்றும் சிலராலும் ஏற்பாடு செய்யப்பட்ட நினைவேந்தல் நிகழ்வு பொலிஸாரால் இன்று தடுக்கப்பட்டது. கொரோனா தனிமைப்படுத்தல் சட்டங்களை முன்வைத்து இத்தகைய நிகழவுகளை நடத்த முடியாது என்று கூறிப் பொலிஸார் இந்தத் தடையை விதித்தனர்.

நிகழ்வில் வேட்பாளர் சிவமோகன் மேலும் தெரிவித்ததாவது:-

மாறி மாறிவந்த சிங்கள அரசுகள் தமிழர்கள் மீது இனப்படுகொலையை நிகழ்த்தியதற்கு சுதந்திரபுரம் படுகொலையும் ஓர் அடையாளமாக இருக்கின்றது. இந்த நினைவு நிகழ்வு ஆண்டு தோறும் நடத்தப்பட்டு வந்தது இன்று கொரோனா வினை காரணம் காட்டி நினைவேந்தலைத் தடுத்தார் கள்.

கொரோனா சட்டத்தினை நாங்கள் மீறவில்லை கடைப்பிடிக்கின்றோம். ஆனால், இந்த நினைவு நிகழ்வினை நடத்த விடாமல் பொலிஸாரை வைத்து அடாவடியில் ஈடுபடுகிறார்கள்.

கொரோனா சட்டத்தின் கீழ் நாங்கள் முப்பது பேர் ஒன்று சேர முடியாது என்றால் இந்த சட்டத்தினை வைத்துக் கொண்டு எப்படி தேர்தலை நடத்தப் போகிறார்கள்.

இன்றோ நாளையோ தேர்தல் பரப்புரைகள் ஆரம்பிக்கப்படபோகின்றன. மக்கள் ஒன்றுகூட முடியாது என்றால் எப்படி இவர்கள் தேர்தல் பரப்புரைகளை அனுமதிக்கப்போகிறார்கள். பரப்புரை செய்ய அனுமதி இல்லாமல் எப்படி ஒரு தேர்தலை நடத்தப்போகிறார்கள்.

சுகாதார நடைமுறைகள் எப்படி கடைப்பிடிக்கப்படவேண்டும் என்று வர்த்தகமானி வந்துள்ளது. அதில் ஒரு பொது இடத்தில் 100 பேர் கூடுவதற்கு அனுமதி உண்டு என்று தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது அப்படியிருக்கும் போது எமது நினைவேந்தலை தடுத்தது சரியா?

இந்த ஆட்சியாளர்கள் செயற்படும் விதம் ஜனநாயகத்திற்கும் எமது மக்களின் வாழ்வியலுக்கும் எதிரானது என்பதை அடித்து சொல்கின்றேன் என்றும் அவர் தெரிவித்தார்.

### போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கான வழியாக

# அரச, தனியார் அலுவலக நேரத்தில் மாற்றங்களைப் பரிந்துரைக்கக் குழு

## அமைச்சு நியமித்தது

கொழும்பு, ஜூன் 10

பயணிகள் பேருந்துகள் மற்றும் ரயில்களில் ஏற்படும் நெரிசலைக் குறைத்து சமூக இடைவெளியைப் பின்பற்ற ஏதுவாகப் பொது மற்றும் தனியார் அலுவலக நேரங்களை மாற்றி அமைப்பதற்குப் பரிந்துரைப்பதற்கான குழு ஒன்றை நியமிக்க போக்குவரத்து சேவைகள் மற்றும் முகாமைத்துவ அமைச்சு தீர்மானித்துள்ளது.

போக்குவரத்து வசதிகளை மேம்படுத்த நியமிக்கப்பட்ட குழுவின் இன்றைய கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. குழுவின் தலைவராக போக்குவரத்து சேவைகள் அமைச்சின் மேலதிக செயலாளரை நியமிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த குழுவில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, இலங்கை போக்குவரத்துச் சபை, ரயில்வே திணைக்களம் மற்றும் மாகாண பயணிகள் போக்குவரத்து அமைச்சின் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த குழு ஒரு வார காலத்திற்குள் அலுவலக நேரங்களை மாற்றி அமைப்பது குறித்த பரிந்துரைகளைச் சமர்ப்பிக்கும். பொது நிர்வாக அமைச்சு அது குறித்து ஆராய்ந்து இறுதி முடிவு எடுக்கப்படும்.

அலுவலக நேரங்களை மாற்றி அமைப்பதன் மூலம் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க முடியுமா என்பது பற்றிப் பரிசீலிக்குமாறு ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷ சில தினங்களுக்கு முன்னர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியி ருந்தார்.

### கொரோனாவுக்காக அதிகம் பணியாற்றிய

## மருத்துவப் பணியாளர்களுக்கு அதிசொகுசு கவனிப்பு விரைவில்

கொவிட் 19 தொற்றாளர்களை பராமரிக்க அதிக காலம் பணியாற்றிய சுகாதாரப் பணியாளர்களை மகிழ்விக்கும் வகையில் அவர்களைக் குடும்பம் சகிதம் இலங்கையில் உள்ள அதிசொகுசு விடுதிகளில் இரண்டு மூன்று நாட்கள் தங்க வைக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியால் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

கொவிட் 19 தொற்றாளர்களுக்கு மருத்துவ சேவைகளை வழங்கிய வைத்தியசாலைகளின் பணிப்பாளர்களுடன் நேற்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார். அங்கு அவர் ஜனாதிபதியின் ஆலோசனை குறித்துத் தெரிவித்தார்.

கொவிட் 19 தொற்று நோய்க்கு சிகிச்சையளிக்கும் போது நோயாளர்களும் சுகாதாரப் பணியாளர்களும் முகம்கொடுத்த பல்வேறு பிரச்சினைகள் குறித்து வைத்தியசாலைகளின் பணிப்பாளர்களும் மருத்துவர்களும் சுகாதார அமைச்சருக்குத் தெளிவுப்படுத்தினர்

இதற்குப் பதிலளித்த அமைச்சர், மேற்குறித்த விடயத்தை ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் சஞ்ஜீவ முனசிங்கவிற்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர், கொவிட் 19 தொற்றாளர்களுக்கு உரிய உணவு மற்றும் இதர வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது பொறுப்பாகும் எனவும் கூறினார்.

இந்தச் சந்திப்பில் சுகாதார அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் சஞ்ஜீவ முனசிங்க, சுகா தார பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க உள்ளிட்ட பலர் கலந்துக் கொண்டனர்.

## தனது பணியைத் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கிழக்கில் தமிழ், முஸ்லிம் மக்களும் சம அளவில் வாழ்கின்றபோதும் சிங்களவர்களைமட்டுமேஉள்ளடக்கிஉருவாக்கப்பட்ட இந்த ஜனாதிபதி செயலணி

தமிழ் முஸ்லிம் தரப்புக்களாலும் உலகளவிலான அமைப்புக்களாலும் கடுமையான விமர்சனத்திற்கு உள்ளாகியிருக்கின்றது. உலக மனித உரிமை அமைப்புக்களும் இந்தச் செயலணி குறித்த தமது கரிசனைகளை ஏற்கனவே வெளிப்படுத்தியிருக்கின்றன.

இந்த நிலையில் பாதுகாப்பு அமைச்சில் செயலணியின் தொடக்கக் கூட்டம் நடத்தப்பட்டது.

எதிர்காலச் சந்ததிக்காக கிழக்கின் வரலாற்றுப் பாரம்பரியங்களைப் பாதுகாத்துப் பேணும் நோக்கத்துடன் இலங்கையின் எல்லா இன, மத மக்களும் இந்தச் செயலணிக்கு தமது முழு ஒத்துழைப்பையும் வழங்கவேண்டும் என்று பாதுகாப்புச் செயலர் தனது தொடக்க உரையில் குறிப்பிட்டார்.

கிழக்கில் பல தொல்லியல் இடங்கள் இருக்கின்றன. பல்வேறு காரணங்களால் இன்று அவற்றில் பல ஆபத்தில் சிக்கியுள்ளன. தேசிய பாரம்பரியச் சொத்தான இவற்றை பாதுகாத்து அந்தந்த இன அல்லது மதக் அடையாளங்களின் அடிப்படையில் மீட்டுருவாக்கம் செய்யவேண்டும் என்பதே ஆட்சியாளர்களின் தேவை என்றார் பாதுகாப்புச் செயலர்.

இந்தத் தொல்லியல் இடங்களை மீட்டுருவாக்கம் செய்து முகாமைத்துவம் செய்வதற்காக அனைத்து இனக் குழுக்களுடனும் செயலணி மிக நெருக்கமாகப் பணியாற்றும் என்றும் அவர் தெரிவித்தார்.

செயலணிக்கு வழங்கப்பட்டுள்ள கடமையை எப்படிச் செயற்படுத்துவது என்பது குறித்து இன்றைய கூட்டத்தில் திட்டமிடப்பட்டது.

செயலணியின் கடமையை வெளிப்படையானதாகவும் செயற்றினுள்ளதாகவும் மேற்கொள்வதற்கு வசதியாக இடஞ்சார் தரவுகளை உள்ளடக்கிய தொல்பொருள் இட தரவுத் தளத்தை உருவாக்குவது என்று இன்றைய கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

இந்த முயற்சிக்கு உள்ளூர் மக்களின் ஆதரவின் முக்கியத்துவம் குறித்தும் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

## யாழ். நாக விகாரையில் உள்ள .............



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதனால் கூண்டின் ஒரு பக்கக் கண்ணாடி உடைந்து சிதறியது.

மோட்டர் சைக்கிளில் வந்த இருவரே காண்ணாடிக் கூட்டைச் சேதமாக்கி விட்டுதப்பிச்சென்றுள்ளனர் எனப்பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

அதேவேளை, தாக்குதலாளிகளை இனம்காணும்வகையில்விகாரையைச் சூழவுள்ள பிரதேசத்தில் காணப்படும் சி.சி.ரி.வி காணொளிகளைப் பொலிஸார் பரிசோதித்து வருகின்றனர்.

இன ஒற்றுமையை விரும்பாதவர்களினால் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம். எனவே இது தொடர்பில் மக்கள் குழப்பமடைய வேண்டாம் என ஸ்ரீ நாக விகாரையின் விகாராதிபதி ஸ்ரீ விமல தேரர் தெரிவித்தார்.

வேண்டத் தகாதவர்கள் இதனைச் செய்திருப்பார்கள்என்றுநினைக்கின்றேன். யாழ்ப்பாணத்தில் தமிழர், சிங்களவர் முஸ்லிம்என்றவேறுபாடின்றிஅனைத்து இன மக்களும் ஒன்றாக இணைந்து செயற்பட்டு வருகின்றோம். அதனை குழப்புவதற்குச் சிலர் இவ்வாறு செய்திருக்கின்றனர்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். இந்த விடயம் தொடர்பில் தென்பகுதியில் உள்ள பௌத்த மக்களோ அல்லது வேறு இன மக்களோ குழப்பமடைய தேவையில்லை.

இந்த விடயத்தைப் பெரிதாக்கி எமது இனஒற்றுமையைக்குலைக்காது அனைவரும் ஒற்றுமையாகச் செயற்படவேண்டும் என்று நான் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இனவாதத்தைத் தூண்டுபவர்களால் இந்தச்சம்பவம் நடந்திருக்கும். எனினும் இது தொடர்பில் பாதுகாப்புத் தரப்பினர் உரிய விசாரணைகளை முன்னெடுத்து, சம்பந்தப்பட்டவரைக் கைது செய்வதற்குரிய நடவடிக்கையினை முன்னெடுத்துள்ளார்கள் - என்றார்.

## வாகன வரிப் பத்திரம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செல்லுபடியாகக்கூடிய தற்காலிக வரி அனுமதிப்பத்திரத்தை உடனடியாகப் பெற்றுகொள்ளமுடியும்.

அதன் முழுமையான பத்திரம் 14 நாட்களிற்குள் வாகன உரிமையாளரது வீட்டு முகவரிக்கு அனுப்பிவைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணையமூடாக விண்ணப்பிப்பவர்கள், மின்னஞ்சல் முகவரி, புகை பரிசோதனை சான்றிதழ், வாகனபதிவு சான்றிதழ், காப்புறுதிபத்திரம், இறுதியாக பெற்ற வரிப்பத்திரம் ஆகிய சான்றிதழ்களை கொண்டு இணைய மூடாக விண்ணப்பிக்கமுடியும்.

இதன் மூலம் விடுமுறை தினங்களிலும் வாகன வரி அனுமதி பத்திரங்களிற்கான விண்ணப்பங்களை சமர்பிக்கமுடியும் என்பது குறிப்பிடதக்கது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தேவை புதிய மார்க்கம்

'நம்ப நட; நம்பி நடவாதே!' என்பது ஆன்றோர் நமக்குக் காட்டிய அறிவு வழிகாட்டல்.

ஆனால் நமது இனத்தின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் கடந்த கால முயற்சிகளில் எல்லாம் நாமும் நமது தலைவர்களும் நம்பவும் நடந்தோம், நம்பியும் நடந்தோம்.

கடைசியில் ஏமாற்றப்பட்டோம். ஏமாந்தோம். ஐம்பதுகளில் இருந்து இந்த இருபதுகள் வரை சுமார் எழுபது ஆண்டு காலத் தமிழர்களின் வரலாறு இந்தப் பட்டறிவைத்தான் – அனுபவத்தைத்தான் – எமக்குத் தந்து நிற்கின்றது.

வரும் தேர்தல்களுக்குப் பின்னர் இன்னொரு தடவை தமிழர் தரப்போடு தீர்வுக்கான பேச்சு முயற்சியில் ஈடுகடப் போகிறார் எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டமைக்குப் பதில் தந்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன். அந்தப் பதிலில் இந்த எழுபது ஆண்டு கால ஏமாற்றத்தின் விளைவான ஆதங்கம் – ஆற்றாண்மை – அப்படியே தொனிக்கின்றது.

"பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அரசுடன் பேசுவதற்கு நாம் எப்போதும் தயார். அரசுதான் நம்பும் வகையில் முதலில் செயற்பட வேண்டும். அப்போதுதான் தமிழ் மக்களும் நாமும் அரசை நம்பி அவர்களுடன் இணைந்து பயணிக்க முடியும்" – என்று சம்பந்தன் சுட்டிக்காட்டுவதன் பின்னணி இதுதான்.

தமிழர் தாயகமான கிழக்கில் தமிழ் பேசும் மக்களின் தொல்லியல் உரிமைகளை – உரித்துக்களை – மூடி, மறைத்து, நிராகரித்துப் புறம் தள்ளிவிட்டு, அத்தாயகத்தை பௌத்த, சிங்களப் புராதன பூமியாகக் காட்டும் வரலாற்றுத் தந்திரோபாய மோசடிக்கு முழு மூச்சாக வலை விரித்துக் கொண்டு, மறுபுறத்தில் தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினைக்குப் பேச்சு மூலம் தீர்வு காணுதல் என்ற சமாளிப்பு நடவடிக்கயை எடுத்தால், அதில் மீள ஒரு தடவைச் சிக்கி ஏமாறத் தமிழர்கள் இணங்கவே மாட்டார்கள்.

தமிழர்களின் உரிமைப் போராட்டம் ஆயுத வழிக்குத் திரும்பி, அதன் உச்சத்தைத் தொட்டு, இப்போது அந்தப் போராட்டம் முறியடிக்கப்பட்டு பதினொரு வருடங்கள் கடந்த நிலையில் அந்த உரிமைப் போரை முன் கொண்டு செல்வதற்குக் காத்திரமான மார்க்கம் எதனையும் கண்டறிய முடியாமல் தவித்து நிற்கின்றது தமிழினம் என்பது உண்மைதான்.

இலங்கையில் ஆளும் தரப்புடன் சமரசம் பேணி, தாஜா பண்ணி, அமைதிப் பேச்சை நடத்துவதும், அதற்கு ஆதரவான அழுத்தத்தைத் தருமாறு சர்வதேசத்தைத் தூண்டுவதும் தவிர, இவ் விடயத்தில் புதிய மார்க்கம் ஏதும் – உத்தி ஏதும் – தமிழ் தரப்பிடமோ, அதற்குக் தலைமை வகிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமோ இல்லை என்பதுதான் இப்போதைய நிலைமையாகும்.

எங்கு சுற்றியும் கடைசியில் தீர்வுக்குத் தங்களிடம்தான் வர வேண்டும், தாங்கள் போடும் பிச்சையைத்தான் தமிழர் தரப்பு யாசகமாக ஏற்க வேண்டும் என்ற மமதையில் சிங்களத் தலைமைகள் உள்ளன.

தமிழர்களின் நீதி, நியாயமான கோரிக்கைகள், விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் கனன்று, பீரங்கிகள் முழங்கி, துப்பாக்கிகள் வெடித்தபோது அவற்றுக்கு மத்தியில் சிங்களத்தின் காதுகளிலும் சர்வதேசத்தின் கவனிப்பிலும் சத்தமாகக் கேட்டன.

புலிகளின் – தமிழர்களின் – ஆயுதங்கள் அடங்கிப்போன பின்னர், அந்த மௌனத்தில், தமிழர் தரப்பின் நியாயமான கோரிக்கைகள், நீதியான அபிலாஷைகள், உரிமைக் குரல்கள் சிங்களத்தினதும், சர்வதேசத்தினதும் செவிகளில் பலமாக விழுவதாயில்லை. அவற்றை கணக்கெடுக்க அவை தயாராகவும் இல்லை.

இதுதான் இன்று தமிழர் தரப்பின் பிரதானமான பிரச்சினை.

வெறுமனே எமது நியாயத்தை உரைத்துப் பயனில்லை. எமக்கு இழைக்கப்பட்ட அநியாயங்களை – கொடூரங்களை – மனித உரிமை மீறல்களை – யுத்தக் குற்றங்களை – ஆதாரங்களுடன் வெளியிட்டு, பிரசாரம் செய்வதால் மட்டும் பயன் கிடைக்கப் போவதில்லை.

நாடாளுமன்றத்தில் ஓர் அரசு தப்பிப் பிழைப்பதற்கான ஆதரவுப் பலம் தமிழர் தரப்பிடம் உள்ளது என்ற பலத்தை வைத்திருந்தும் கூட தமிழர் தரப்பால் எதுவும் செய்ய முடியவில்லை. எதையும் சாதிக்க முடியவில்லை.

இந்தப் பின்புலத்தில், சிங்கள அரசுடன் பேச்சு நடத்தி – சமரசம் செய்து – நியாயமான தீர்வு காண்போம் என்று காத்திருப்பதில் அர்த்தம் இல்லை; பயனில்லை; பலனுமில்லை.

அதையும் தாண்டித் தமிழர் தரப்பு தனது வலிமையையும், தனது உரிமைக் கோரிக்கையின் நியாயத்தையும் வெளிப்படுத்திக் காட்ட ஒரு மார்க்கத்தைக் கண்டறிய வேண்டும்.

தேர்தல்களில் வாக்களித்தலும், மக்கள் பிரதிநிதித்துவம் மூலம் விடயங்களைக் கையாள்வதும் இந்த முயற்சியில் ஓர் அங்கம்தான். அது மட்டுமே மார்க்கமாகி விட முடியாது.

சிங்கள அரசுகள், சர்வதேச சமூகத்தின் முன்னால் கண்துடைப்பு நடவடிக்கையாக பேச்சு அழைப்புக்களையும், சமாதான நாடகங்களையும், சமரசக் கூத்துக்களையும் அரங்கேற்றி, காலத்தை இழுத்தடித்து, அதனைப் பயன்படுத்தித் தமிழர் தாயகத்தை பௌத்த, சிங்கள மயப்படுத்தும் தனது நாசகாரத் திட்டத்தை சத்தம், சத்தடியின்றி முன்னெடுக்கும்.

ஒரு புறம் பேச்சு அழைப்பு, சமாதான நாடகம், சமரச கூத்துக்களுக்கு முகம் கொடுத்தபடி மறுபுறம் தமிழர் தாயகத்தைக் காபந்து பண்ணும் – பாதுகாத்துக் காப்பாற்றும் – முயற்சியிலும், நடவடிக்கையிலும் தமிழர் தரப்பு தீவிரமாக ஈடுபட வேண்டும்.

தனித்து சமாதானப் பேச்சு முயற்சியை மட்டும் நம்பியிராமல், இவை அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு மார்க்கத்தைத் தமிழர் தரப்பு கண்டறிந்து வகுத்து, அவ்வழியில் செயற்பட வேண்டும்.

# புதிய கல்விக் கொள்கைகள் தொடர்பில் மக்கள் கருத்தறிய கோட்டா வலியுறுத்து



கொழும்பு, ஜூன் 10

புதிய கல்விக் கொள்கை தொடர்பாக மக்களின் கருத்துக்களை அறியும்படி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் வழங்கப்பட்ட வாக்குறுதியின்படி புதிய தேசிய கல்விக் கொள்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது. அதன் பணிகள் எந்தளவில் இருக்கின்றன என்று விளக்கும் சந்திப்பு நேற்று ஜனாதிபதி செயலகத்தில் இடம் பெற்றது.

இலங்கையின் கல்வி நடவடிக்கைகள் தொடர்பான ஜனாதிபதி செயலணி ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து தேசிய கல்விக் கொள்கையின் தற்போதைய நிலை பற்றி இதன் போது ஜனாதிபதிக்குத் தெளிவுபடுத்தியது.

'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கை பிரகடனத்திற்கு ஏற்ப 'அனைத்து பிள்ளைகளுக்கும் சமமான கல்வி வாய்ப்பு' என்ற கருப்பொருளின் அடிப்படையில் கல்விக் கொள்கை தயாரிக்கப்பட்டுவருகிறது.

எடுக்கப்படும் தீர்மானங்கள் நாட்டுக்கும், எதிர்கால தலைமுறைக்கும் தாக்கம் செலுத்தக்கூடியது என்பதால் அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் கல்விக் கொள்கை தயாரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி இந்தச் சந்திப்பில் சுட்டிக்காட்டினார்.

கல்விக் கொள்கை தொடர்பான இறுதி அறிக்கை அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னர் அதனை குறைந்தது சுமார் இரண்டு மாதங்கள் விரிவான சமூக உரையாடலுக்கு உட்படுத்துமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களின் மூலம் அனைத்து முன்மொழிவுகளையும் மக்களுக்குத் தெரியப்படுத்தி அது தொடர்பாகக் கிடைக்கப்பெறும் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளையும் உள்ளடக்கி இறுதி அறிக்கையைத் தயாரிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

கொவிட் ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டிருந்த போதும் நேரலை (ஒன்லைன்) மூலமான கல்வியில் சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக செயலணி தெரிவித்துள்ளது.

இந்த தரவுகளை அடிப்படையாக கொண்டு ஒன்லைன் மூலமான உயர் கல்வித்துறையை பிரபல்யப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஆங்கிலம், கணிதம் மற்றும் விஞ்ஞானம் போன்ற ஆசிரியர் பற்றாக்குறை உள்ள பாடங்களை ஒன்லைன் மூலம் மேற்கொள்ளக் கூடிய வகையில் திட்டமிடுமாறும் அறிவுறுத்தினார்.

நாட்டின் அனைத்துப் பல்கலைக்கழகங்களும் மிக வேகமாக ஒன்லைன் நடவடிக்கைகளில் ஈடுபட்டு சிறந்த முன்னேற்றத்தை அடைந்துள்ளன. இந்தியா, இந்தோனேசியா மற்றும் மலேசியா போன்ற நாடுகளைப் பார்க்கிலும் சிறந்த முன்னேற்றத்தை அடைந்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

ஒன்லைன் கல்வி முறைமைக்கு கலை பீட மாணவர்களிடமிருந்து எதிர்பாராதளவு சிறந்த பங்களிப்பு கிடைத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

க.பொ.த சாதாரண தர மற்றும் உயர் தர பரீட்சை பெறுபேறுகளுக்காக மாணவர்கள் காத்திருக்கும் காலம் மற்றும் பல்கலைக்கழக நுழைவை எதிர்பார்த்திருக்கும் இரண்டு வருட காலம் என்பவற்றுக்குள் அனைத்து மாணவர்களுக்கும் ஆங்கிலம் மற்றும் கணினி தொழிநுட்ப அறிவை வழங்குவதற்கான பொறிமுறையை உருவாக்கும்படியும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

முன்பள்ளிகள் முதல் ஆரம்ப, இரண்டாம் நிலை, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி வரை அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கிய வகையில் அனைத்து பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

# மாற்றுத் திறனாளிகளுக்கான இலவச செயற்கை உறுப்புக்கள்

## அம்பாறையில் வழங்கி வைப்பு







(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

அம்பாறை மாவட்டத்தில் கல்முனை, கல்முனை வடக்கு, நாவிதன்வெளி, சாய்ந்தமருது, காரைதீவு, சம்மாந்துறை ஆகிய பிரதேச செயலகங்களுக்குட்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு ஆறு இலட்சம் ரூபா பெறுமதியான செயற்கை உடலுறுப்புக்களை இலவசமாக வழங்கப்பட்டன.

இலங்கை நவஜீவன நிறுவனத்தின் 'கிழக்கு மற்றும் தென் மாகாணங்களில் மாற்றுத்திறனாளிகளின் சமூக சேவைகளை அணுகுதல் மற்றும் உள்வாங்கப்பட்ட அபிவிருத்தி

இலக்குகளை அடைதல்' எனும் வேலைத் திட்டத்திற்கு அமைவாக சி.பி.எம் நிறு வனத்தின் நிதி உதவியுடன் இந்த செயற்கை உடலுறுப்புக்கள் இன்று இலவசமாக வழங்கப்பட்டன.

செயற்கைக் கால்கள், கால்களைப் பலப்படுத்தும் ஆதரவுத் தொகுதிகள் என்பன இவ்வாறு கையளிக்கப்பட்டன.

அம்பாறை மாவட்ட செயற்திட்ட இணைப்பாளர் ரி.டி.பத்மகைலநாதன், கல்முனை வடக்கு பிரதேச செயலக நிருவாக சேவை அதிகாரி எம்.ஜீவராஜ், சமூக சேவைகள் உத்தியோகத்தர்களான கே.சிவகுமார், எம்.ஐ.எம்.முர்சித், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி எல்.சபாஸ்கரன் உட்படப் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# வறுமையை தமக்கு சாதகமாக்கி சிறுமியைச் சீரழித்த காமுகர்கள்

## இந்தியாவில் பயங்கரம்

வறுமையில் அல்லாடிய 12 வயதுச் சிறுமியிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டதாகக் குற்றம்சாட்டப்பட்ட ஆறு பேர் இந்தியாவின் கன்னியாகுமரி மாவட்டத்தில் கைது செய்யப்பட்டனர்.

இது குறித்துத் தெரியவருவதாவது:-

சிறுமியின் தந்தை வெளியூரில் உணவகம் ஒன்றில் பணிபுரிகிறார். கொரோனா ஊரடங்கு காரணமாக அவர் அங்கேயே தங்கிவிட்டார். தாய் மனநலம் பாதிக்கப்பட்டவர். இந்த நிலையில், வறுமையில் வாடிய சிறுமி அக்கம் பக்கம் உள்ள வீடுகளுக்குச் சென்று அவர்கள் கொடுக்கும் சிறு, சிறு வேலைகளைச் செய்து அவர்கள் வழங்கும் பணம் மற்றும் உணவுப் பொருள்களைக் கொண்டு தாயும் தானுமாகப் பசியாறி வந்துள்ளாள்.

பக்கத்து வீட்டில் தொலைக்காட்சி பார்க்கச் சென்ற சிறுமிக்கு 15 வயதுச் சிறுவன் ஒருவன் பாலியல் தொந்தரவு கொடுத்துள்ளான். இதைக் கண்ட ஒரு பெண் அந்தச் சிறுவனைக் கண்டித்து அனுப்பிவிட்டுச் சிறுமியை விசாரித்துள்ளார். அப்போது அந்த சிறுமி தான் செல்லும் வீடுகளில் உள்ளவர்கள் தனக்கு உதவி செய்வதோடு பாலியல் தொல்லையிலும் ஈடுபடுவதாக, கூறியுள்ளார். ஒரு மளிகை கடைக்காரர் எப்படியெல்லாம் பாலியல் தொந்தரவு கொடுத்தார் என்பதையும் அந்தச் சிறுமி செய்து காட்டியுள்ளார். இதையடுத்துப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், சிறுமிக்குப் பாலியல் தொந்தரவு கொடுத்த சிறுவன் உட்பட ஆறு பேரைக் கைது செய்து சிறையில் அடைத்தனர். மருத்துவப் பரிசோதனைகள் மூலம் அந்த ஆறு பேரும் குற்றவாளிகள் என்பது உறுதியானது. சிறுமியின் வறுமையைப் பயன்படுத்தி இவர்கள் பாலியல் தொந்தரவு கொடுத்தது தெரியவந்துள்ளது. 75 வயதுடைய கடைக்காரர், ஒளிப்படக் கலையகம் நடத்தும் ஒருவர், இரண்டு சிறுவர்கள் உட்பட இந்த வழக்கில் 6 பேர் சிறைப்படுத்தப்பட்டனர்.

# கொரோனா ஆரம்பித்தது டிசம்பரில் அல்ல ஓகஸ்ட்டில்


## ஆய்வொன்றில் புதிய தகவல்





கொரோனா வைரஸ் சீனாவின் வுஹானில் 2019ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதமே பரவியிருக்க வாய்ப்பிருப்பதாக அமெரிக்க ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. சீனாவின் வுஹான் நகர மருத்துவமனையின் வாகன நிறுத்துமிடம் குறித்த செயற்கைக் கோள் படங்களையும், தொற்று நோய் பற்றி இணையத்தளத்தில் தேடப்பட்ட அளவு என்பவற்றையும் ஆராய்ந்ததில் இது தெரிய வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஹார்வர்ட் மெடிக்கல் ஸ்கூல் எனும் நிறுவனம் நடத்திய ஆய்வில் இவ்வாறு குறிப்பிடப்படுகிறது. வுஹானில் உள்ள 5 மருத்துவமனைகளின் வாகன நிறுத்துமிடங்களில் அதற்கு முந்தைய ஆண்டு ஓகஸ்ட் மாதத்துடன் ஒப்பிடும்போது 2019 ஓகஸ்ட்டில் கார்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்ததாக இந்த ஆய்வு தெரிவிக்கிறது. அதேபோல் சீனாவில் தொற்று நோய் தொடர்பான சொற்கள் தேடலில் பயன்படுத்தப்பட்டது ஓகஸ்ட் மாதம் முதலே அதிகமாக இருந்ததாக இந்த ஆய்வில் தெரிய வந்துள்ளது. சீனாவின் வுஹானில் 2019ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கொரோனா வைரஸ் இணங்காணப்பட்டது என்பதை மறுக்கிறது இந்த ஆய்வு. 2019ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் ஆரம்பித்த கொரோனாத் தொற்று 2019ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் உச்சம் பெற்றிருக்கலாம் என்கிறது இந்த ஆய்வு. வுஹானின் மிகப் பெரிய மருத்துவமனையான தியன்யூ மருத்துவமனையில் கார் தரிப்பிடப் பகுதியைச் சுட்டுகின்ற செயற்கைக்கோள் படங்களை வைத்து ஆராய்ந்த போது 2018 ஓகஸ்டில் 171 கார்கள் இருந்தன என தெரியவந்தது.

2019 ஓகஸ்டில் இது 285 கார்களாக அதிகரித்துள்ளது தெரியவந்தது. மேலும் இதே காலகட்டத்தில் வுஹான் மருத்துவமனைகளை நோக்கிப் படையெடுத்த கார்களின் எண்ணிக்கை 90சதவீதம் அதிகரித்ததாகத் தெரியவந்துள்ளது. அதாவது அதிகார பூர்வமாகக் கொரோனா தொற்று அறியப்படுவதற்கு முன்பே சீனாவில் மருத்துவ ரீதியாக ஏகப்பட்டது நிகழ்ந்துள்ளது. தெற்குச் சீனாவில் இந்த வைரஸ் தோன்றியுள்ளது என்றும் அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# இந்தியாவில் பரவும் கொரோனா தோன்றிய இடம் கண்டுபிடிப்பு

இந்தியாவில் பரவி வருகிற கொரோனா வைரஸ் எங்கிருந்து வந்தது என்பது குறித்துப் பெங்களூரு ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் குமார் சோமசுந்தரம், மைனக் மொண்டல், அங்கிதா லாவர்டே உள்ளிட்டோரைக் கொண்ட குழுவினரே தமது ஆராய்வின் முடிவில் அதைக் கண்டறிந்தனர். இந்திய கொரோனா வைரஸ் மரபணு வரிசையானது உலகளவில் நிகழும் விகாரங்களுடன் (ஸ்டிரெய்ன்ஸ்) ஒப்பிடும்போது, வேறுபாட்டைக் காட்டுகிறது. இதனால் இந்தியாவில் பரவி வருகிற கொரோனா வைரஸ், ஐரோப்பா, மத்திய கிழக்கு நாடுகள், ஓசியானியா என்றழைக்கப்படுகிற பசுபிக் பெருங்கடல் தீவு நாடுகள் மற்றும் தெற்காசிய பிராந்தியங்களில் தோன்றி வந்திருக்கலாம் எனத் தெரிய வந்துள்ளது. இந்த நாடுகள்தான் அதிகளவில் பயணம் மேற்கொள்ளப்பட்ட நாடுகள் என்று இந்த ஆராய்ச்சி குழுவினர் தெரிவித்தனர். இந்திய கொரோனா வைரஸ்கள், கூடுதலாக ஜி (50 சதவீதம்), ஐ (6.7 சதவீதம்) உயிரினக் கிளைகளால் ('கிளேடு'களால்) செறிவூட்டப்பட்டவை. 40 சதவீத மாதிரிகள், அறியப்படாத மரபணு வேறுபாடுகளை கொண்டுள்ளன எனவும் தெரிய வந்துள்ளது.

# போராட்டம் செய்த 53 பேர் ஹொங்கொங்கில் கைது





சீனாவின் தன்னாட்சிப் பிரதேசமான ஹொங்கொங்கில் நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தின் போது 53 பேரைக் ஹொங்கொங் பொலிஸார் கைது செய்தனர். சீனாவால் திரும்பப் பெறப்பட்ட ஒப்படைப்புத் தீர்மானத்துக்கு எதிராக நடந்த இந்தப்போராட்டத்தின் போது போராட்டக்காரர்கள் தங்கள் அலைபேசிகளில் ஒளியை ஏற்படுத்தி அணிவகுத்துச் சென்றனர். சீன அரசின் ஆதரவுடன் ஹொங்கொங்கில் முன்மொழியப்பட்ட தேசிய பாதுகாப்புத் தீர்மானத்தின் காரணமாக அங்கு பதற்றங்கள் அதிகரித்துள்ளன. ஹொங்கொங் பாதுகாப்புச் செயலர் ஜோன் லீ, சீன ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில், ஹொங்கொங்கில் புதிய சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு சிறப்புப் பொலிஸ்பிரிவைஅமைத்துவருவதாகவும், அதில்உளவுத்துறை, விசாரணைக் குழு ஆகியன இருக்கும் என்றும் கூறினார்.

# செவ்வாய் நோக்கிப் பறக்கிறது அரபு நாட்டின் முதல் விண்கலம்





செவ்வாய்க் கோளைநோக்கி முதல் முறையாக ஐக்கிய அரபு இராச்சியம் விண்கலம் ஒன்றை ஏவவுள்ளது. "நாமேட் அமல்" என்று பெயரிடப்பட்ட இந்த விண்கலம் இன்னும் சில வாரங்களில் ஜப்பானால் தயாரிக்கப்பட்ட ரொக்கெட் மூலம் ஜப்பானியத் தீவு ஒன்றில் இருந்து ஏவப்பட உள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. செவ்வாயை ஏழு மாதப் பயணத்துக்குப் பின்னர் சென்றடைந்து 687 நாள்கள்வரை செவ்வாயின் காலநிலை மாற்றம், சுற்று சூழல் குறித்த தரவுகளை இந்த விண்கலம் பூமிக்கு அனுப்பும். எதிர்காலத்தில் இளம் அரபு விஞ்ஞானிகள் விண்வெளிப் பொறியியல் ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கு இந்தத் திட்டம் ஊக்கமாளிக்கும் என்று இதன் இயக்குநர் சாரா அல் அமிரி தெரிவித்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு








## கறுப்பு அடிமை வியாபாரியின் சிலை கடலில் வீசப்பட்டதன் எதிரொலி

# லண்டனில் அதிரடி நடவடிக்கை அகற்றப்படுகின்றன சிலைகள்!



பிரிட்டனின் லண்டன் நகரில் நிறுவப்பட்டுள்ள சிலைகளில் பெரும்பாலானவை அகற்றப்பட்டு வருகின்றன. இதன் முதற்கட்டமாக 18ஆம் நூற்றாண்டில் அடிமைகளை வைத்து வர்த்தகத்தில் ஈடுபட்ட ரொபர்ட் மில்லிகனின் சிலை லண்டன் அருங்காட்சியகத்துக்கு வெளியே வைக்கப்பட்டிருந்த நிலையில் அது அகற்றப் பட்டது. உயர்ந்த பீடத்தில் நிறுவப்பட்டிருந்த குறித்த சிலையை அதன் அத்திபாரத்திலிருந்து பிரித்தெடுத்து, பாரந்தூக்கி மூலம் தூக்கி எறியும்போது சூழ்ந்திருந்தவர்கள் ஆரவாரம் செய்து பாராட்டினர். அங்குள்ள பல சிலைகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

### பின்னணி

அமெரிக்கப் பொலிஸாரின் பிடியில் உயிரிழந்த ஜோர்ஜ் ஃபிளாய்ட்டுக்கு நீதி கோரிப் பிரிட்டனின் துறைமுக நகரமான பிரிஸ்டலில் கடந்த ஞாயிற்றுக் கிழமை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அங்கிருந்த வர்த்தகர் எட்வேர்ட் கொஸ்டனைச் சித்திரிக்கின்ற சிலையைத் தூக்கிக் கடலில் வீசினர். 17ஆம் நூற்றாண்டுகளில் கறுப்பினத்தவர்களை அடிமைப்படுத்தி வர்த்தகத்தில் ஈடுபட்ட அவரது சிலையைக் கடலில் வீசிய மறுநாளான திங்கட்கிழமை பிரிட்டனின் ஒக்ஸ்போர்ட் நகரில் திரண்ட போராட்டக்காரர்கள் அங்கு நிறுவப்பட்டிருந்த காலனித்துவவாதியன சிசில் ரோட்ஸின் சிலையை அகற்றுமாறு கோரினர். இவ்வாறாக ஃபிளாய்ட்டுக்கு நீதிகோரித் தொடர்ந்த லண்டன் போராட்டங்கள் பிரிட்டனில் நிறுவப்பட்டுள்ள அடிமை வர்த்தகர்கள் மற்றும் காலனித்துவவாதிகளின் சிலைகளின் பக்கம் கவனத்தைத் திருப்பின. இதன் எதிரொலியாக லண்டனில் நிறுவப்பட்டுள்ள சிலைகள், வீதிகள், கட்டடங்களுக்கு இடப்பட்டுள்ள பெயர்கள் அனைத்தையும் மறு ஆய்வுக்கு உட்படுத்துமாறு லண்டன் மேயர் சாதிக் கான் உத்தரவிட்டார். எங்கள் நகரம் மற்றும் நாட்டின் செல்வத்தின் பெரும்பகுதி அடிமை வர்த்தகத்திலிருந்து பெறப்பட்டது என்பது கசப்பான உண்மை என்றாலும், இது பொது இடங்களில் கொண்டாடப்பட வேண்டியதில்லை என்று அவர் தனது கீச்சகப் பக்கத்தில் பின்னதாகப் பதிவொன்றையும் இட்




டார். அதன் முதற்கட்டமாகவே ரொபர்ட் மில்லிகனின் சிலை அகற்றப்பட்டுள்ளது. சமூகத்தில் நிறுவப் பட்டுள்ள சிலைகள் குறித்த சமூகத்தின் விருப்பங்களை நாங்கள் அங்கீகரிக்கிறோம் என்று இந்தச் சிலை அகற்றல் குறித்து ஓர் அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

# மிகப்பெரிய ஏரி நாசம்!

ரஷ்யாவில் மின் உற்பத்தி நிலையத்தில் ஏற்பட்ட எண்ணெய் கசிவு ஆற்றில் கலந்து தண்ணீரை மாசாக்கிய நிலையில் இப்போது அந்த மாசு எண்ணெய் ஏரி ஒன்றைச் சென்றடைந்து அதனை நாசமாக்கியிருக்கிறது.

பாதிக்கப்பட்டிருப்பது ரஷ்யாவிலேயே மிகப்பெரிய நன்னீர் ஏரி என்று தெரிவிக்கப்படுகின்றது.

ரஷ்யாவின் நோரில்ஸ்க் நகரத்துக்கு அருகிலுள்ள மின்னுற்பத்தி நிலையம் ஒன்றில் இருந்த எரிபொருள் தொட்டி சேதமடைந்ததால் 20ஆயிரம் தொன் வரையிலான மசகு எண்ணை அருகிலிருந்த ஆற்றில் கலந்தது.

இதையடுத்து ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் அங்கு அவசர நிலையைப் பிறப்பித்திருந்தார்.

ஆற்றில் கலந்த எண்ணெய் ஆற்று நீரில் அள்ளுண்டுபோய் ஓர் ஏரியில் சேர்ந்துள்ளது. அம்பர்ன்யா என்கிற ஆற்றையும் அதைச் சுற்றியுள்ள நிலப்பரப்பிலும் கலந்த எண்ணையே தற்போது நன்னீர் ஏரியை மாசுபடுத்தியுள்ளது.

இந்த எண்ணெய் கசிவு நீர் ஆதாரங்களைப் பாதிப்பதோடு, இதைக் குடிக்கும் விலங்குகள், கரையில் வளரும் செடி, கொடிகள் ஆகியவைமீதும்தாக்கத்தை உண்டாக்கும்என்று சூழலியாளர்கள் கூறுகின்றனர்.

மேலும், இந்தக் கசிவு ஆர்ட்டிக் பெருங்கடலுக்கும் பரவும் அபாயம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. கிட்டத்தட்ட 20 கிலோ மீற்றர் தூரம் வரை பரவியிருக்கும் இந்தக் கசிவைக் கட்டுப்படுத்துவதற்கு அவசர நிலைக்குழுக்கள் பல முயற்சிகளையும் செய்து வருகின்றன.

எண்ணெய் கலந்த ஆறு மீண்டும் பழைய நிலையை அடைவதற்குச் சுமார் 10 ஆண்டுகள் ஆகும் என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் ஏற்கனவே கவலை தெரிவித்திருந்தனர்.





## ஒரு சிலர்தான் மோசம் ஏனையோர் சிறந்தோர்

### பொலிஸார் பற்றி இப்படிக் கூறுகிறார் ட்ரம்ப்

கறுப்பினத்தவரான ஜோர்ஜ் பிளாய்ட் கொல்லப்பட்ட விவகாரம் அமெரிக்கா முழுதும் போராட்டத்தைத் தூண்டி உள்ள நிலையில், அவர் கொல்லப்பட்ட மினியா போலிஸ் நகரிலிருந்து பொலிஸ் நிலையங்கள் கலைக்கப்பட உள்ளதாகச் செய்திகள் வெளியாகியிருந்தன. அமெரிக்காவின் மின்னசோட்டா மாநிலம், மினியாபோலிஸ் பொலிசாருக்கு ஏற்பட்டுள்ள களங்கத்தைப் போக்கும் வகையில், மினியாபோலிஸ் பொலிஸ் துறை கலைக்கப்பட்டு மீண்டும் கட்டமைக்கப்படும் என்றும் அதன் மூலம் சமூகப் பாதுகாப்பின் புதிய மாதிரியை உருவாக்க உள்ளதாகவும் மினியாபோலிசின் நகராட்சித் தலைவர் லிசா பெண்டர் தெரிவித்தார். இந்த நிலையில் இவ்வாறு பொலிசைக் கலைக்க மாட்டேன் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். வெள்ளை மாளிகையில் சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற உயர் அதிகாரிகளுடன் நடந்த கலந்துரையாடலில் பேசியபோதே ட்ரம்ப் இவ்வாறு தெரிவித்தார். மோசமானவர்கள் சிலர் இருந்தாலும் 99 சதவீத பொலிஸார் சிறந்த மனிதர்கள் என்று ட்ரம்ப் அப்போது தெரிவித்தார்.







அமெரிக்காவில் கறுப்பினத்தவரான ஜோர்ஜ் ஃபிளாய்ட் படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டித்தும் கறுப்பினத்தவர்களின் உரிமைகளை வலியுறுத்தியும் கொழும்பில் அமெரிக்கத் தூதரகத்தின் முன்பாகப் போராட்டம் நடத்த முற்பட்ட சமயம் கைது செய்யப்பட்ட 53 பேரையும் பிணையில் செல்ல நீதிமன்றம் நேற்று மாலையே அனுமதித்தது.

கொரோனா தனிமைப்படுத்தல் சட்டங்களின் கீழ் கொழும்பில் நடக்க இருந்த இந்த ஆர்ப்பாட்டத்திற்கு எதிராகப் பொலிஸார் ஏற்கனவே நீதிமன்றில் தடை உத்தரவு பெற்றிருந்தனர்.

இதனை அடுத்து நேற்றுக் காலை ஆர்ப்பாட்டம் செய்ய முற்பட்டவர்களில் ஒரு தொகுதியினரை விரட்டியடித்த பொலிஸார் 53 பேரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

முன்னிலை சோசலிசக் கட்சியைச் சேர்ந்த அவர்கள் அனைவரையும் உடனடியாகவே கொழும்பு கோட்டை நீதிவான் பிணையில் செல்ல அனுமதித்தார்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டபோது எடுக்கப்பட்ட ஒளிப்படங்கள் இவை.




# கருணாவின் கட்டவுட்டுக்கள் இன்று காலை தீயிட்டு எரிப்பு

தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் பிரதியமைச்சருமான கருணா அம்மான் எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனிற்கு ஆதரவு தெரிவித்து கல்முனை பகுதியில் காட்சிப்படுததப்பட்ட 35 அடி விளம்பர பதாதைகள் இனந்தெரியாதவர்களால் இன்று புதன்கிழமை அதிகாலை எரிக்கப்பட்டன.

ஓகஸ்ட் 5ஆம் திகதி பொதுத்தேர்தல் நடக்கவுள்ள நிலையில், அம்பாறை மாவட் டம் கல்முனை வாழ் இளைஞர்கள் திகாமடுல்ல தேர்தல் தொகுதியில் கப்பல் இலச்சினையில் போட்டியிடும் நாடாளுமன்ற வேட்பாளரான கருணா அம்மானிற்கு 35 அடி நீளமான கட்டவுட்களை முக்கிய சந்திகளில் வைத்திருந்தனர்.

எங்கும் செல்வோம்; எதிலும் வெல்வோம் என்ற வாசகத்துடன் இந்த கட்டவுட்கள் வைக்கப்பட்டிருந்தன. கப்பல் இலட்சனையுடன் கூடிய துண்டுப் பிரசுரங்கள் கல்முனை நகரப் பகுதியிலுள்ள மக்களுக்கு சில தினங்களுக்கு முன்னர் வழங்கப்பட்டிருந்தன.

பாண்டிருப்பு சந்தை, தாளவட்டுவான் சந்தி, நீலாவணை, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு ஆகிய பகுதிகளில் வைக்கப்பட்டிருந்த முரளிதரனின் கட்டவுட்டுக்களே எரிக்கப்பட்டுள்ளன.

அடையாளம் தெரியாத சிலரால் இவை எரியூட்டப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.




# சரணாலயங்கள், பூங்காக்கள் அடுத்த திங்கள் மீள திறப்பு

கொழும்பு, ஜூன் 10

இலங்கையில் உள்ள மிருகக்காட்சி சாலைகள், பூங்காக்கள் மற்றும் தேசிய சரணாலயங்கள் என்பன எதிர்வரும் 15ஆம் திகதி முதல் திறக்கப்படவுள்ளன என்று சுற்றாடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

சுற்றாடல் அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன இந்த அறிவிப்பை இன்று விடுத்தார்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் நலன் மற்றும் சுற்றுலாத்துறையின் வளர்ச்சி என்பவற்றைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் கொரோனா பெருந்தொற்றுப் பரவலை அடுத்து மக்கள் ஒன்றுகூடும் இடங்கள் அனைத்தும் மூடப்பட்டன.

இந்த வாரத் தொடக்கத்தில் இருந்து நாட்டை இயல்பு நிலைக்குத் திருப்பும் நடவடிக்கைகளை அரசு தீவிரப்படுத்தியது. அதன் அடுத்த கட்டமாக இப்போது சரணாலயங்கள், பூங்காக்கள் திறக்கப்படுகின்றன.

காலைக்கதிர் Kalaikkathir

கொரோனாச் சந்தை

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு

தினம் ஒரு தலைப்பு



சித்திரப்போட்டி

நாளைய (11.06.2020) தலைப்பு
கொரோனாச் சந்தை

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலை யில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623





## பனிச்சங்கேணி வனத்தில்

# கள்ள மணல் அள்ளிய 3 டிராக்டர்கள் சிக்கின

### 6 பேர் கைது

(ந.குகதர்சன்)

வாகரைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பனிச்சங்கேணி வனத்தில் சிறப்பு அதிரடிப் படையினர் நடத்திய தேடுதலில் கள்ள மணல் அள்ளிய 3 உழவு இயந்திரங்கள் கைப்பற்றப்பட்டன. 6 சந்தேகபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வாழைச்சேனை வட்டார வன உத்தியோகத்தர் எஸ்.தணிகாசலம் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கைக்குச் சிறப்பு அதிரடிப் படையினரின் ஒத்துழைப்பும் பெறப்பட்டது. மட்டக்களப்பு மாவட்ட வன அதிகாரி பிரனிப் சுரவீர, மாவட்ட உதவி வன அதிகாரி எம்.ஏ.அஜித் குரே மற்றும் வன உத்தியோகத்தர்களும் இந்த நடவடிக்கையில் கலந்துகொண்டனர்.



வாழைச்சேனை வனத்தில் சட்டவிரோத மண் அகழ்வு மற்றும் சட்டவிரோத மரம் கடத்தல் நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்று வருவகின்றன. அதனைத் தடுப்பதற்கு தனது தலைமையில் வட்டார வன உத்தியோகத்தர்கள் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக வாழைச்சேனை வட்டார வன உத்தியோகத்தர் எஸ்.தணிகாசலம் தெரிவித்தார்.

# ஜனாதிபதி செயலணிகள் குறித்து சர்வதேச மன்னிப்பு சபை விசனம்

**கொழும்பு, ஜூன் 10**

**உலகளாவிய ரீதியில் கொரோனா பெருந்தொற்றுப் பரவலினால் பாதிப்புகள் ஏற்பட்டுள்ள நிலையில், இலங்கையில் முஸ்லிம் சமூகம் தன்னிச்சையான முறையில் இலக்குவைக்கப்பட்டிருப்பதாகக் குற்றஞ்சாட்டியிருக்கும் சர்வதேச மன்னிப்புச்சபை, இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் வளங்களைப் பாதுகாப்பதற்காக ஜனாதிபதியினால் நிறுவப்பட்ட செயலணியில் சிறுபான்மை இன உறுப்பினர்கள் விலக்கிவிடப்பட்டுள்ளமை பெரும் குழப்பகரமான நிலையைத் தோற்றுவித்திருக்கிறது எனவும் விசனம் வெளியிட்டிருக்கிறது.**

சர்வதேச மன்னிப்புச்சபையின் மதம் அல்லது நம்பிக்கையைப் பின்பற்றுவதற்கான சுதந்திரம் தொடர்பான விவகாரங்களை ஆராயும் விசேட அறிக்கையாளரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் கொரோனாத் தொற்றினால் முதலாவது முஸ்லிம் நபரின் இறப்பு கடந்த மார்ச் மாதம் 30 ஆம் திகதி நீர்கொழும்பில் இடம்பெற்றது. இதன்போது அவரது உறவினர்களின் விருப்பையும் மீறி, அவருடைய சலடம் சுகாதார அதிகாரிகளால் தகனம் செய்யப்பட்டது என்றும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டிப்பட்டிருக்கிறது.

அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இலங்கையின் சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டிருந்த சுகாதார நெறிமுறைகளில் கொரோனாவினால் இறப்பவர்களின் உடலைத் தகனம் செய்தல் மற்றும் அடக்கம் செய்தல் ஆகிய இரண்டுமே ஏற்புடையது என்று குறிப்பிடப்பட்டுள்ளமை தொடர்பில் உயிரிழந்த நபரின் குடும்பத்தவர்கள், முஸ்லிம் சமூகம், முஸ்லிம் மத மற்றும் அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட அனைவராலும் சுட்டிக்காட்டப்பட்ட நிலையிலேயே இச்சம்பவம் நடைபெற்றது.

உயிரிழந்த நபரின் உடலை அடக்கம் செய்வதென்பது இஸ்லாமியர்களின் மத நம்பிக்கையாகும். இந்தச் சம்பவம் இடம்பெற்ற மறுநாள் – மார்ச் 31 ஆம் திகதி, இச்சுகாதார நெறிமுறைகள் தொடர்பில் சுகாதார அமைச்சு மீளாய்வை மேற்கொண்டதுடன், கொரோனாத் தொற்றினால் இறப்பவர்கள் அல்லது அதனால் இறந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுபவர்களின் சடலங்கள் தகனம் செய்யப்பட வேண்டுமென உத்தரவிட்டது. எனினும் உலக சுகாதார அமைப்பின் அறிக்கைகளில் இறந்த சடலத்திலிருந்து கொரோனா வைரஸ் பரவும் என்பதற்கான எவ்வித ஆதாரங்களும் இல்லையென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகாத, கொழும்பைச் சேர்ந்த 44 வயதுடைய ரினோஸா என்ற முஸ்லிம் பெண்ணின் உடல் தவறுதலாகத் தகனம் செய்யப்பட்ட சம்பவமும் பதிவாகியிருந்தது.

185 நாடுகள் கொரோனாவினால் உயிரிழந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கு அனுமதியளித்திருக்கும் நிலையில், இலங்கையில் தகனம் செய்யவேண்டுமென வலியுறுத்தி சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை நீக்கிக்கொள்ளுமாறு கடந்த மே மாதம் 21ஆம் திகதி முஸ்லிம் குழுவொன்று கோரிக்கை விடுத்தது.

அது மாத்திரமன்றி இலங்கையில் முஸ்லிம் சமூகத்தினர் மத்தியில் கொரோனா வைரஸ் அதிகளவில் பரவக்கூடிய ஆபத்திருப்பதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மற்றும் இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம் ஆகியவற்றினால் வெளியிடப்பட்ட அறிக்கைகளும் சமூக வலைத் தளங்களில் கடும் கண்டனத்திற்கு உள்ளாகின.

அதனைத் தொடர்ந்து கடந்த மாதம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலர் கமல் குணரத்னவின் தலைமையில் கிழக்கிலங்கையில் தொல்பொருள் வளங்களைப் பாதுகாப்பதற்கான ஒரு ஜனாதிபதி செயலணியை நிறுவினார். முன்னாள் மற்றும் இந்நாள் இராணுவ அதிகாரிகளினால் தலைமை தாங்கப்படும் இந்த ஜனாதிபதி செயலணி இன ரீதியான மற்றும் அரசியல் ரீதியான சிக்கல்களை ஏற்படுத்துமா என்பது குறித்த சந்தேகங்கள் தற்போது மேலெழுந்திருக்கின்றன.

மேலும் இச்செயலணியில் சிறுபான்மையின சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் இன்மையும் பெரும் குழப்பத்திற்குரிய விடயமாகக் காணப்படுகின்றது என்றும் அவ்வறிக்கையில் விசனம் வெளியிடப்பட்டுள்ளது.

## சொர்க்கத்துக்கு செல்லும் ஆசையில் தீ மூட்டி எரிந்து கருகி செத்த சிறுமி

10 வயதுச் சிறுமி ஒருவர் தனக்குத் தானே தீ மூட்டிக் கொண்டதில் உடல் கருகி உயிரிழந்தார்.

தீ மூட்டிக்கொண்டு எரிந்தால் சொர்க்கத்திற்குச் செல்ல முடியும் என்ற கற்பிதம் காரணமாக அவர் இவ்வாறு செய்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

கிரிபாவ பொலேவெவ பகுதியைச் சேர்ந்த 10 வயதான சத்ரசா குமாரி என்ற சிறுமியே இவ்வாறு அநியாயமாக உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த சிறுமி கிரிபாவ மகா வித்தியாலயத்தில் தரம் 5 இல் கல்வி கற்றுவருகிறார்.

உயிரிழந்தவர் எனது பேர்த்தி. அவரது தாய் தனது கணவரை விவாகரத்து செய்துவிட்டு மறுமணம் செய்யவுள்ளார். இதனால் பேர்த்தி என்னுடனேயே வசித்து வருகிறார்.

பிராமணர் ஒருவர் தனது உடலுக்குத் தீமூட்டி சொர்க்கத்திற்கு சென்றார் என்ற செய்தியைக் கேள்விப்பட்ட அவர், தானும் தீமூட்டிக் கொண்டிருக்கக்கூடும் என்று உயிரிழந்த சிறுமியின் பாட்டி நீதிமன்றில் சாட்சியம் வழங்கியுள்ளார்.

எனினும் சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## மாணிக்கக்கல் தருவதாக பல இலட்சம் ரூபா மோசடி

### 10 மாதங்களின் பின்னர் ஒருவர் கைது

மாணிக்கக்கல் பெற்றுத் தருவதாகக் கூறி, பண மோசடி செய்த குற்றச்சாட்டில், ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 05ஆம் திகதி, கந்தானை பொலிஸ் பிரிவில், மாணிக்கக்கல் பெற்றுத் தருவதாகக் கூறி, 14 இலட்சம் ரூபாவை மோசடி செய்த சம்பவம் தொடர்பில் பேலியகொடை மேல் மாகாண வடக்கு குற்றப் பிரிவினர் நீண்ட நாள் விசாரணையை முன்னெடுத்து வந்தனர்.

இந்தநிலையில், மஹபாகே பொலிஸ் பிரிவில் நேற்றுமுன்தினம் பகல் குறித்த சந்தேகநபரைக் கைதுசெய்துள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்றுத் தெரிவித்துள்ளது.

நிகதலுபொத பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

# கொழும்பு வைத்தியசாலை கொள்ளைச் சந்தேகநபருக்கு மறியல்!

*கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்ட வைத்தியரை 48 மணி நேரம் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.*

*7.9 மில்லியன் ரூபா பெறுமதியான பணத்தை கொள்ளையிட்டுச் சென்ற சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரான வைத்தியர் வைத்தியசாலையில் இருந்து தப்பியோடுகையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.*

*வைத்தியசாலையின் ஊழியர்களுக்கு வழங்கப்படவிருந்த மேலதிக நேர கொடுப்பனவு பணமே இவ்வாறு கொள்ளையிடப்பட்டிருந்தது.*

*வைத்தியசாலையின் கணக்குப் பிரிவு அறைக்குள் மாறு வேடத்தில் சென்ற இந்த வைத்தியர் விளையாட்டுத் துப்பாக்கி ஒன்றைக் காட்டி மிரட்டிவிட்டு அங்கிருந்த பணத்தை கொள்ளையடித்துக் கொண்டு தப்பியோடினார்.*

*வீதிக்குச் சென்று ஓட்டோ ஒன்றில் அவர் தப்பியோட முற்பட்டபோது பொலிஸாரும் பொது மக்களும் சேர்ந்து அவரை மடக்கிப் பிடித்தனர்.*

*சம்பவம் தொடர்பில் மூன்று பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன.*

# கொரோனா விழிப்புணர்வை ஏற்படுத்தியதில்

# ஊடகங்களுக்குப் பெரு வெற்றி!

பஞ்சாட்சரம் ஜோன் டிலக்ஷன்

உலகில் 200இக்கு மேற்பட்ட நாடுகளைப் பீடித்துள்ள தொற்று நோயாகக் காணப்படுவது கொரோனாத் தொற்றாகும். பல உயிர்களை காவுகொண்ட கொடிய நோயாக இது காணப்படுகின்றது. கொரோனா என்றாலே அனைவரும் பயந்து நடுங்குகின்றனர். கொரோனாவை நாட்டில் இருந்து விரட்டிப் பழைய நிலைமைக்கு நாட்டைக் கொண்டு வருவதற்கான முயற்சியில் அரசும், தொற்றுள்ளோரை இனங்கண்டு குணப்படுத்தும் செயற்பாட்டில் மருத்துவ மற்றும் சுகாதாரத் துறையினரும் இரவு, பகல் பாராது தங்களுடைய கடமைகளைச் செய்து வருகின்றனர். இவற்றுக்கு மேலாகக் கொரோனா தொற்று பற்றிய விழிப்புணர்வை நாட்டு மக்களுக்கு ஏற்படுத்தித் தொற்றில் இருந்து பாதுகாப்பதற்கான முயற்சியில் ஊடகங்கள் மகத்தான பங்களிப்பை வழங்குகின்றன. இது கட்டாயமாகப் பாராட்டப்படவேண்டிய விடயம்.

## ஊடகங்களின் பணிகள்

ஊடகம் என்பது ஏதாவது இரண்டு பிரிவுக்கு இடையே காவுவது அல்லது கடத்துவது என்று பொருள்படுகின்றது. மனிதர்களுக்கு இடையில் தகவல்கள், செய்திகளைப் பரப்புகின்றன ஊடகங்கள். மக்களுக்கு எவ்வாறான விடயங்களில் போதிய, மேலதிக அறிதல்கள் தேவைப்படுகின்றனவோ அவற்றை வழங்கும் வேலையும் ஊடகங்களினதே. மக்கள் நலத்திட்டங்கள் வருகின்ற வேளைகளில் அவற்றை மக்கள் மத்தியில் கொண்டு சேர்ப்பதாகவும், மக்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகளைப் பொது வெளியில் தெரியப்படுத்துவதும், என அரசு – மக்கள் இடையோன ஓர் இணைப்புப் பாலமாகவும் ஊடகங்கள் செயற்படுகின்றன. தேசிய, சர்வதேச நடப்புக்களை உடனுக்குடன் தெரியப்படுத்துவதும், மக்களுக்கு வேண்டிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதும்கூட ஊடகங்களின் பணியே. இத்தகைய ஊடகப் பணிகள் இன்னும் ஏராளமுள்ளன.

## ஊடக வகைகள்

ஊடகங்களை அச்சு ஊடகங்கள், இலத்திரனியல் ஊடகங்கள், மாற்று ஊடகங்கள் என மூன்று வகையாகப் பிரிக்க முடியும். அச்சு ஊடகங்கள் எனும் போது பத்திரிகைகள், சஞ்சிகைகள், பதாதைகள், சுவரொட்டிகள், நூல்கள், துண்டுப்பிரசுரங்கள், சிறிய செய்தி வெளியீடுகள், தகவல் தாள்களைக் குறிப்பிடலாம். அதேபோன்று இலத்திரனியல் ஊடகங்களாகத் தொலைக்காட்சி, வானொலி, இணையம், மின்னஞ்சல் போன்றவற்றைக் கூறலாம். மாற்று ஊடகங்கள் என நாடகங்கள், ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், அரங்கங்கள், நடனம், சித்திரம், கவிதைகள், சிறுகதைகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறு பல ஊடகங்கள் காணப்படுகின்றன. இத்தகைய ஊடகங்கள் கொரோனா வைரஸ் பேரிடரைத் தெளிவுபடுத்தி அதன் ஆபத்தில் இருந்து விலகி இருப்பது குறித்து மக்கள் மத்தியில் பல்வேறு வழிகளில் விழிப்புணர்வை ஏற்படுத்தின என்றால் அது மிகையாகாது.

## இலத்திரனியல் ஊடகங்களில் விழிப்புணர்வு

தொலைக்காட்சி, வானொலி போன்ற இலத்திரனியல் ஊடகங்கள் நாளுக்கு நாள் நிமிடத்துக்கு நிமிடம் மக்கள் மத்தியில் கொரோனாத் தொற்றுக் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தின. குறிப்பாகப் பிரதான செய்திகள், மணித்தியாலச் செய்திகள் மூலம் பல அறிவுறுத்தல்களை மக்களுக்கு வழங்கின. மேலும் மருத்துவத் துறையில் நிபுணத்துவம் பெற்றவர்களை அழைத்துவந்து நேர்காணல் செய்ததன் மூலம் பல செய்திகளை மக்களுக்கு வழங்கின. அத்தோடு சில நிறுவனங்கள் மற்றும் ஸ்தாபனங்கள் போன்றன அனுசரனை வழங்கி நிகழ்ச்சிகளுக்கு இடையிலான விளம்பர இடைவேளையில் நிபுணத்துவம் பெற்ற மருத்துவர்கள் ஊடாகவும், கேலிச் சித்திரக்கதைகள் ஊடாகவும் மக்களுக்கு விழிப்புணர்வை எற்படுத்தின. அத்தோடு வதந்திகளை எடுத்துக்காட்டி அதன் உண்மைத் தன்மையை மக்களுக்குக் கூறின.



## அச்சு ஊடகங்களில் விழிப்புணர்வு

பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றனவும் பல விழிப்புணர்வு சார்ந்த நடவடிக்கைகளை முன்னெடுத்தன. சிங்களம், தமிழ், ஆங்கிலம் என மூன்று மொழிகளிலும் பல பத்திரிகைகள் நாளுக்கு நாள், வாரத்துக்கு வாரம் என வெளிவந்து எழுத்தாளர்கள், செய்தி நிருபர்கள், சுகாதார அமைப்புக்கள், சுகாதார மற்றும் மருத்துவ துறைசார்ந்த நிபுணர்களினுடைய விழிப்புணர்வு சார்ந்த கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டு சேர்த்தன. மேலதிகமாக பல் கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்கள் போன்றன பதாதைகள், துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள் மூலம் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தின. காலை, மாலை என இரண்டு பதிப்புகளாக வெளியாகின. மின்னிதழாகவும் வெளியாகி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தின.

## நோய் தொற்றாமல்




## தடுப்பதில் அக்கறை

இந்த ஊடகங்கள் மூலம் நோய்த் தொற்றைத் தடுப்பதற்குரிய பல விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. கைகளை அடிக்கடி சவர்க்காரம் கொண்டு கழுவ வேண்டும், மற்றவருடன் உரையாடும்போது 3தொடக்கம் 8அடி வரையிலான இடைவெளி பேண வேண்டும், ஒன்லைன் மூலம் பதிவு செய்து பெறும் உணவுகள், கடைகளில் தயாரிக்கப்பட்ட உணவுகள், மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள இடங்களில் விற்கப்படும் வீதியோர உணவுகளை வாங்கி உண்பதைத் தவிர்க்க வேண்டும், மாமிச உணவை நன்றாக வேக வைத்துச் சமைத்து உண்ண வேண்டும், அத்தோடு நோய் எதிர்ப்புச்சக்தி அதிகமுள்ள மரக்கறி, கீரைவகைகளை உணவில் அதிகம் சேர்த்தல் மற்றும் மருத்துவக் குணமுள்ள மூலிகைகளைப் பயன்படுத்தல், புளிப்புச் சுவை உடைய பழங்களை உட்கொள்ளுமாறு பரிந்துரைத்தல், மூக்கு, வாய்ப் பகுதிகளைச் சரியான முகக் கவசங்கள் பயன்படுத்தி மூடுதல், வெளியே சென்று வந்தவுடன் 20 செக்கன்கள் வரை சவர்க்கரமிட்டுக் கை கழுவுதல் எனப் பல விழிப்புணர்வு நடவடிக்கைகளை மக்களை மேற்கொள்ளப் பணித்தன.

## மருத்துவ உதவி கோரவும் வேண்டின

இவற்றுக்கு மேலதிகமாக நோயின் அறிகுறிகளான காய்ச்சல், வறட்டு இருமல், மூச்சு விடுவதில் சிரமம், தசை, மூட்டு, தொண்டை வலி, குளிர் நடுக்கம், வாந்தி மற்றும் குமட்டல், மூக்கடைப்பு, வயிற்றுப் போக்கு, சிறுநீரகச் செயலிழப்பு போன்றவை ஏற்படின் மருத்துவரை நாடவேண்டியது அவசியம் என்றும் ஊடகங்கள் மக்களுக்குத் தெளிவுபடுத்தின. இந்தத் தொற்று வயோதிபர்கள், சிறுவர்களுக்கே அதிகம் ஏற்படுகின்றது. அத்தோடு நீரிழிவு, சிறுநீரக நோய், நீண்ட கால சுவாச நோயால் பாதிக்கப்பட்டோர், நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தோர், தொற்றுள்ள நபரோடு தொடர்பில் உள்ளவர்கள், தொற்றுள்ள நாடுகளுக்குப் பயணம் செய்பவர்களே அதிகமாகப் பாதிக்கப்படுகின்றனர் என்றும் மக்களுக்குப் பல்வேறு விழிப்புணர்வை ஊடகங்கள் ஏற்படுத்தின. இவற்றைத் தாண்டி ஊரடங்கு குறித்தும், அது தளர்த்தப்படுகின்ற காலம் குறித்தும் தளர்வுகளின் போது கடைப்பிடிக்கவேண்டிய சுகாதார நடைமுறைகள் குறித்தும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தின.

## பாராட்டுக்குரிய பணி இது

கொரோனாத் தொற்று உச்சமடைந்த காலத்தில் நாட்டில் ஊடகங்களின் சேவைகள் பாராட்டும் வகையில் இருந்தாலும் சமூக ஊடகங்களில் பல பொய்யான, நடைமுறைக்குச் சாத்தியமில்லாத கருத்துக்கள் பரப்பப்பட்டிருந்தன. இது மிகவும் கவலைக்குரியதாகும். கொரோனாவில் இருந்து மக்களைப் பாதுகாப்பதற்கான முன்னாயத்த நடவடிக்கைகள் பலவற்றை ஊடகங்கள் மேற்கொண்டிருந்ததைப் போல கொரோனாப் பயத்திலும், அச்சத்திலும் இருந்து மக்களை மீட்டெடுப்பதற்கான செயற்பாடுகளை ஊடகங்கள் இனி முன்னெடுக்க வேண்டும். கொரோனாவால் ஏற்பட்டுள்ள நலிவுகளை மக்கள் எதிர்கொள்வதற்குரிய வலுவூட்டல்களை இனிவரும் காலங்களில் ஊடகங்கள் மக்களுக்கு அறிவுறுத்த, பரிந்துரைக்க வேண்டும். அவை குறித்த ஆரோக்கியமான உரையாடல்களையும் மேற்கொள்ள வேண்டும்.

கட்டுரையாளர் - சமூகவியல் சிறப்புக்கலை கிழக்குப் பல்கலைக்கழகம்

# தமிழ், முஸ்லிம் மக்களின் தனித்தனி அரசியல் பயணங்கள் ஆபத்தானவை

## தலைவர்கள் கரிசனை செய்யவேண்டும் என்கிறார் சி.வி.கே.

**கொழும்பு, ஜூன் 10**

**இலங்கையில் சிறுபான்மையினர் எதிர்நோக்கியிருக்கும் சிக்கலான அரசியல் சூழ்நிலையில் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் தனித் தனியாகப் பயணிப்பது ஆபத்தானது, இது குறித்து இரு சமூகத் தலைவர்களும் கரிசனை காட்டவேண்டும் என்று தெரிவிக்கின்றார் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம்.**



தமிழ் மக்களின் இருப்பைக் கேள்விக்குள்ளாக்கி சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை நிலை நிறுத்துவதற்கான முயற்சியாகவே கிழக்கு மாகாணத்தில் மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டிருக்கும் செயலணியைப் பார்க்கிறோம் என வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவா சீ.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிங்கள இனவாதக் குழுக்களே கிழக்கு மாகாண மரபுரிமைசெயலணியில்உள்ளடங்கியிருக்கின்றன. ஆகவே இந்தச் செயலணியின் நோக்கம் பௌத்த சிங்கள மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதாகவே இருக்கும்.

மாகாணசபை இருந்த காலத்தில் தொல்லியல் திணைக்களத்தின் பொறுப்புள்ள உயர் பதவி தமிழர் ஒருவருக்கும் வழங்கப்படவேண்டும் என நாங்கள் கேட்டிருந்தோம். ஆனால் எங்களுடைய கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. அத்தோடு வடக்கின் எல்லையில் தமிழ் மக்களின் நிலம் பறிக்கப்படுவதும் நிற்கவில்லை.

தமிழர்களின் நிலம், மொழி அச்சுறுத்தப்படுகின்றன. மறுபக்கம் தாம் பௌத்த சிங்கள அரசை உருவாக்கியிருப்பதாக ஞானசார தேரர் போன்றவர்கள் கூறுகின்றனர். எனவே தோதல் முடிவின் பின்னா தற்போதுள்ளதை விடவும் நிலைமைகள் மேலும் மோசமாகலாம்.

தமிழ் தரப்பு இந்த விடயத்தில் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் செயற்படுவது கட்டாயமாகும். மேலும் இன்றுள்ள சூழலில் தமிழ் பேசும் மக்கள் கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் ஒன்றிணைந்து ஒரு பொது வேலைத்திட்டத்தின் அடிப்படையில் செயற்படுவதே பயனுள்ளதாக இருக்கும்.

தனித்தனியான பயணங்கள் ஆபத்தானவை. இது குறித்து முஸ்லிம் தலைவர்களும் தமிழ் தலைவாகளும் அதிகம் காசனை காட்டவேண்டும் என மேலும் கூறியுள்ளார்.

## அளுத்கம சிறுவன் மீது தாக்குதல்: அடிப்படை உரிமை மனுத் தாக்கல்

அளுத்கமவில் 14 வயது சிறுவன் பொலிஸாரினால் மோசமாகத் தாக்கப்பட்டு சட்ட வைத்திய அதிகாரியால் இனரீதியில் நிந்திக்கப்பட்டுள்ள நிலையில், அந்த சிறுவனின் குடும்பத்தினர் மேற்படி விவகாரம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்வதற்கும், உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்வதற்கும் தீர்மானித்துள்ளனர்.

இந்தத் தகவலை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானா தெரிவித்துள்ளார்.

சிறுவன் கட்டுக்கடங்காத விதத்தில் நடந்துகொண்டான் என்ற கதையை உருவாக்குவதற்குப் பொலிஸார் முயல்கின்றனர் எனக் கூறியுள்ள அவர், இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்ட விடயத்தை நேரில் பார்த்த அனைவரும் அறிக்கைகளாக ஆதாரங்களைச் சமர்ப்பித்துள்ளனர்; வீடியோ ஆதாரங்களும் உள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்தச் சம்பவத்தின் பின்னர் குறித்த விடயத்தைச் சட்டரீதியாக அணுக வேண்டாம் என்று குடும்பத்தினருக்குப் பொலிஸார் அழுத்தம் கொடுத்து வருகின்றனர் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## வடக்கு ரூ.30 லட்சம்; கிழக்கு ரூ.4 கோடி கொரோனா நிதியை நேற்று வழங்கின

கொவிட்-19 சுகாதார சமூகப் பாதுகாப்பு நிதியத்திற்கு வடக்கு மாகாண அரச ஊழியர்கள் சார்பில் 30 லட்சம் (3 மில்லியன்) ரூபாவும் கிழக்கு மாகாண அரசஊழியர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் சார்பில் 4 கோடி (40 மில்லியன்) ரூபாவும் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கான பத்திரங்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷவிடம் வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநர்கள் கையளித்தனர்.

மத்திய மாகாண கல்வித் திணைக்களம் 14 கோடி 13 லட்சம் ரூபாவையும், வரையறுக்கப்பட்ட மத்திய மாகாண கல்விச் சேவைகள் சேமநிதி, கடன் கொடுக்கல் வாங்கல் தொடர்பான கூட்டுறவு சங்கம் 2 லட்சம் ரூபாவையும், நோர்வூட் பிரதேச சபை தலைவர் கே.கே. ரவி 50 ஆயிரம் ரூபாவையும் நிதியத்திற்கு அன்பளிப்பு செய்துள்ளனர்.

ஊவா மாகாண ஆளுநர் உள்ளிட்ட மாகாண அரச அதிகாரிகள் அன்பளிப்புச் செய்த ஒரு கோடி 16 லட்சம் ரூபாவுக்கான காசோலை ஆளுநர் ராஜா கொல்லுரேவினாலும், தென் மாகாண அரசாங்க அதிகாரிகள் அன்பளிப்புச் செய்த 2 கோடி 2 லட்சம் ரூபாவுக்கான காசோலை ஆளுநர் விலீ கமகேவினாலும், மேல் மாகாண அரச அதிகாரிகள் அன்பளிப்பு செய்த 2 கோடி ரூபாவுக்கான காசோலை ஆளுநர் மார்ஷல் ஒப் த எயார் போர்ஸ் டபிள்யு. டீ.எம்.ஜே ரொான் குணதிலகவினாலும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன.

## இஸ்லாமிக் றிலீப் வீட்டுத் திட்ட மக்களுக்குத் தற்காலிக நிம்மதி

### மலகூடக் கழிவு நீர் பவுசர் மூலம் அகற்றப்பட்டது







**(ஏ.எல்.எம்.ஷினாஸ்)**

கல்முனை மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட மருதமுனை - பெரியநீலாவணை இஸ்லாமிக் றிலீப் வீட்டுத் திட்டத்தில் கழிவுநீர் தேங்குவது தொடர்பான பிரச்சினைக்குத் தற்காலிகத் தீர்வாக மலசலகூடக் கழிவுகள் நேற்று 'கலி பவுசர்' மூலமாக அகற்றப்பட்டன.

கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ.எச்.ரஹ்மானின் சகோதரர் ஏ.நௌசாத்தின் நிதிப் பங்களிப்புடன் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 16 வருடகாலமாக இஸ்லாமிக் றிலீப் வீட்டுத் திட்டத்தில் கழிவு வெளியேற்றப் பாதை இன்றி மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர்.

மலசலகூடக் கழிவுகள் உட்பட கழிவு நீர் கிராமத்தில் தேங்கிக் கிடப்பதால் இங்கு வசிக்கும் மக்கள் சுகாதாரப் பிரச்சினைகள் உட்படப் பல்வேறு பிரச்சினைகளையும் எதிர்கொண்டு வருகின்றனர்.

கல்முனைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.எச்.சுஜித் பிரியந்த தலைமையிலான குழு குறித்த வீட்டுத்திட்டத்திற்கு கடந்த 07 ஆம் திகதி நேரில் வருகை தந்து பார்வையிட்டது. மக்களின் உதவியுடன் கழிவு நீர் தேங்கும் இடத்தைச் சுத்தம் செய்து கொடுத்தது.

இதையடுத்து நேற்று செவ்வாய்க்கிழமை மலசலகூடக் கழிவுநீர்க் குழியில் இருந்து நீரை வெளியேற்றிச் செல்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது.

## கிண்ணியா வெடிவிபத்தில் மீனவர் ஒருவர் உயிரிழப்பு

திருகோணமலை - கிண்ணியா பகுதியில் மீன்பிடிப்பதற்குச் சட்டவிரோதமாகப் பயன்படுத்தப்படும் வெடிபொருள் வெடித்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை, கிண்ணியா, பெரியாற்றுமுனை எனும் இடத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

பெரியாற்றுமுனை பகுதியைச் சேர்ந்த மீனவர் ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்தார்.

சம்பவத்தில் மற்றொருவரும் படுகாயமடைந்து கிண்ணியா வைத்தியசாலையின், அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

கடலுக்குக் கொண்டு செல்வதற்காக வெடிப்பொருளைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்த சமயத்தில் அது தவறுதலாக வெடித்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.06.2020 இல் வெளியிடப்பெற்றது.